# தி/கிண்/அல் புர்க்கான் வித்தியாலயம்
## முதலாந் தவணைப் பரீட்சை 2020

## தமிழ்

## தரம் - 07

பெயர்:.............................. நேரம் : 2 மணி

பகுதிI

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

01. உங்கள் அழகிய முகம் என்றும் போல் இல்லை.முகம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.

1) அழகு 2) தலை 3) வதனம் 4) வனப்பு

02. மாணவர்கள் உற்சாகத்துடன் பாடசாலைக்கு வந்தனர். உற்சாகம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

1) சோர்வு 2) சுறுசுறுப்பு 3) பரிவு 4) கலகலப்பு

03. காட்டு விலங்குகளில் களிறு மிகவும் பெரியது. களிறு என்பதன ் எதிர்ப்பாற் சொல்

1) மறி 2) பசு 3) பிடி 4) பிணை

04. தொல்காப்பியர் நான்கு நிலமாகப்பிரித்து நானிலம் என்று குறிப்பிட்டார். இவ்வாக்கியத்தின் எழுவாய்.

1) நிலத்தை 2) பிரித்து 3) குறிப்பிட்டார் 4) தொல்காப்பியர்

05. குலவி, குளவி, குழவி, குலம் என்ற சொற்களின் பொருள்கள் ஒழுங்கு முறையில் வருவது.

1) குழந்தை, உறவாடி, வண்டு, சாதி

2) உறவாடி, வண்டு, குழந்தை, சாதி

3) வண்டு, உறவாடி, சாதி,குழந்தை

4) சாதி, வண்டு, உறவாடி, குழந்தை

06. ‘‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்’’என்ற பாடலைப் பாடியவர்.

1) கம்பர் 2) காளிதாஸர்3) பாரதியார் 4) திருவள்ளுவர்

07. ஒரு வாக்கியத்தில் தொடராக வரும் சொற்களைப் பிரித்துக ் காட்டுவதற்கு பயனப்டுத்தப்படும் நிறுத்தற் குறியீடு.

1) காற்புள்ளி 2) முற்றுப்புள்ளி 3) வினாகக்றி 4) வியப்புக்குறி

08. பணிவுடைய நல்ல மாணவன் பெரியோரது பாராட்டைப் பெற்றான். இதில் வந்துளள் எழுவாய் அடைமொழி

1) பாராட்டைப் 2) பெரியோர் 3) மாணவன் 4) நல்ல

09. முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை

1) 12 2) 30 3) 18 4) 216

10)“கடமைசெய்வதிலும் பிறர் நலம் பேணுதல் சுயநலம் காப்பதற்கே”என்ற கருத்தை உணர்த்தும் பழமொழி

1) செய்யுந் தொழிலே தெய்வம்

2) ஊரார ̇பிள்ளை ஊட்டி வளர்த்தால் தன் பிளள்ள தானாய் வளரும்

3) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

4) ஆனை இருந்தாலும் ஆயிரம் பொன் இறநத்ாலும் ஆயிரம் பொன்

11. ஒத்த ஓசை உடைய சொற்கூட்டம்

1) மணம், பணம், குணம்

2) வரம், வாரம், வறம்

3) வடை, வாடை, வட்டை

4) தரம், தாரம், தறம்

12. காட்டு விலங்குகளைப் பாதுகாகக்ும் புகலிடம்

1) பனி வலயம் 2) குளிர் வலயம் 3) சரணாலயம் 4) வெப்ப வலயம்

13. ய், ர், ல், வ், ழ், ள் என்ற மெய் எழுத்துகக்ளின் வகை

1) வலலினம் 2) மெல்லினம் 3) கடையினம் 4) இடையினம்

14. ஒலியின் வரிவடிவம் எனக்கூறப்படுவது.

1) உச்சரிப்பு 2) எழுத்து 3) வாசிப்பு 4) பேச்சு

15. கிரந்த எழுத்து காணப்படும் சொல்

1) பாசம் 2) வேடம் 3) பாடம் 4) கோஷம்

16. காடும், காடு சார்ந்த நிலம் எனப்படுவது

1) குறிஞ்சி 2) முல்லை 3) மருதம் 4) நெய்தல்

17. “டெலிபோன்”என்ற சொல்லின் தமிழ் வடிவம்.

1) தொலைபேசி 2) எழுது கருவி 3) தட்டச்சு 4) விசைப் பலகை

18. காந்தியடிகள் “போர்ப்பந்தர்”என்ற ஊரில் பிறந்தார்.இதில் வந்துள்ள ஊர் என்ற சொல்

1) பொருட்பெயர் 2) சினைப் பெயர் 3) இடப் பெயர் 4) காலப் பெயர்

19.“மலரும் மாலையும்”என்ற நூலில் காணப்படும் பாடல்.

1)“காங்கேயன ̇துறையிலிருந்து கீரி மலை”

2) “கல்லும் மலையும் குதித்து வந்தேன்”

3) “அறம் பொருள் இன்பம் வீடெறும்”

4) “பெற்றம் புலியின் தோல் போரத்து”

20.கீழ்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதும்போது அமையும் ஒழுங்கு முறை

அ. உலோகங்களை தீயில ̇காய்ச்சி கருவிகளை அமைக்கப் பழகிக் கொண்டான். ஆ. காலம் செல்லச் செல்ல மனிதனின் அறிவு வளர்ச்சி பெற்றது.

இ. நெருப்பு மனித குலம் கண்டு முதல் அறிவியல் கண்டபிடிப்பாகும்.

ஈ. கொடிய விலங்குகளை விரட்ட தீயைப் பயனப்டுத்தினர்.

5) அ, ஆ, இ,ஈ 2) ஆ, இ,ஈ, அ 3) ஈ, ஆ, அ, இ 4) இ,ஈ, ஆ, அ

(40 புள்ளிகள்)

## பகுதி 11

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

02. பின்வருவனவற்றுள் ஒன்று பற்றி 150 சொற்கள் கொண்ட ஒரு கட்டுரை எழுதுக.

1) கல்வியின் சிறப்பு
2) இயற்கை இன்பம்
3) விஞ்ஞான உலகம்
4) கைத் தொலைபேசியின் சுயசரிதை

(20 புள்ளிகள்)

03. உமது பாடசாலையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப்போட்டி பற்றி உமது நண்பனுக்கு 75 சொற்களில் கடிதம் ஒனறு எழுதுக.

(15 புள்ளிகள்)

04. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாகக்ளுக்கு விடை எழுதக.

1. நாம் உரிமையாகப் பெற்றுக் கொண்டுள்ள செல்வங்கள் எவை?
2. சிறைவாசம் எப்படி இருக்கிறது என்று காந்தியடிகள் குறிப்பிடுகின்றார்.
3. சுட்டெழுத்துகக்ள் எவை?
4. அந்தரேயின் தாயினது குணப்பண்புகள் 2 எழுதுக.
5. சிறுமியின் பெயர் யாது? அவளுக்கு எத்தனை வயது?

(15புள்ளிகள்)

05. பின்வரும் சொற்களுக்கு பொருள் விளங்கும் வகையில் வாககியம் அமைக்குக.

1) தலை –
2) உழை –
3) மூளை–
4) மனம் -
5) மணம் -

(10 புள்ளிகள்)